**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.233/2023**
**Prosecution Witness - PW11**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜெனோ ரெனிட்டஸ் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025.

(A1 to A9 are present.

முதல் விசாரணை on :–

நான் வெள்ளியாவிளை ஊரில் வசித்து வருகிறேன். நான் மத்திகோடு ஊராட்சியில் Vice President ஆக உள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளின் பெயர்கள் குறிப்பிட்டு தெரியாது. 08.07.2022 அன்று இரவு 8.45 மணியளவில் புதுவிளையில் இருந்து திங்கள் நகர் நோக்கி இன்னோவா காரில் சென்றுகொண்டிருந்தோம். அப்போது மணிகண்டன் என்பவர் வெட்டுகத்தி கையில் வைத்திருந்தார். நாங்கள் சென்ற வாகனத்தை அவர் வழிமறித்தார். அவருடன் இரண்டு நபர்கள் உண்டு. (வெட்டுகத்தியை வைத்திருந்த நபர் என்று சாட்சி 1வது எதிரியை அடையாளம் காட்டுகிறார்) அந்த இரண்டு நபர்கள் ஆஜர் எதிரிகளில் இருக்கிறார்களா என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஒரு பைக் கொண்டுவந்து குறுக்கே விட்டு, எங்கள் வண்டி போகமுடியவில்லை. கோபு, ஐயப்பன், ரமேஷ் ஆகிய மூவரும் கம்பியால் அடிக்க வந்தார்கள். அந்த மூவரையும் ஆஜர் எதிரிகளில் அடையாளம் காட்ட முடியவில்லை. வண்டியை நிப்பாட்டிவிட்டு கோபாலகிருஷ்ணன் வண்டியில் இருந்து கீழே இறங்கினான். மணிகண்டன் வெட்டுகத்தியால் வெட்ட வரும்போதும், அவர் மாறிகொடுத்ததால், அவர் மீது வெட்டு படவில்லை. அந்த ஊரில் இருந்த வேறு 3 நபர்கள் வந்து கோபாலகிருஷ்ணனை கீழே தள்ளி ,

அவரை கம்பியால் அடித்து , காலால் மிதித்து கெட்ட வார்த்தை பேசினார்கள். இனி இந்த ஊருக்கு வந்தால் உன்னை கொன்று போடுவேன் என்ற சொன்னார்கள். அதில் ஒருவர் கல்லை எடுத்து போட்டதில் எங்களுடைய காரின் வலது பக்க கண்ணாடி உடைந்தது. காரின் பேனெட்டில் பெரிய கல்லை தூக்கி போட்டார். பின்னர் கோபாலகிருஷ்ணனை நெய்யூர் சி.எஸ்.ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது, கோபாலகிருஷ்ணனின் கழுத்தில் இருந்த தங்க கோவி செயின் மற்றும் அவருடைய பிரேஸ்லெட் காணவில்லை. அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து பணத்தை காணவில்லை. நானும் , தங்கதுரையும் இரணியல் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது ஊருக்கும், புதுவிளைக்கும் இடையே 9 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். புதுவிளையை சுற்றி உள்ள ஊர்களில் உள்ள நபர்களை எனக்கு தெரியாது என்றால், சரிதான். போலீசார் விசாரணையில் நான் எதற்காக சம்பவ இடத்திற்கு சென்றேன் என்ற விபரத்தை சொன்னேன். போலீசார் விசாரிக்கும்போது எங்களை மூன்று பேர் வழிமறித்ததாக குறிப்பிட்டு சொன்னேன். அந்த மூன்றுபேர்களின் பெயர்கள் தெரியாது. அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் எதிரிகளா என்ற விபரம் எனக்கு குறிப்பிட்டு சொல்ல இயலாது. பைக்கை நிறுத்தி எங்களது காரை வழிமறித்த நபர்கள், ஆஜர் எதிரிகளா என்ற விபரம் எனக்கு குறிப்பிட்டு சொல்ல இயலாது. போலீசார் விசாரணையில், இரண்டு நபர்கள் பைக்கில் வந்து காரை வழிமறித்ததாக சொன்னேன். போலீசார் விசாரணையில் கார் பேனெட்டில் பெரிய கல்லை தூக்கி போட்டதாக சொன்னேனா என்ற விபரம் நினைவில் இல்லை. சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் 10 பேர்களுக்கு மேல் இருப்பார்கள். அதில் யார் கம்பி, கல் வைத்திருந்தார்கள் என்றும், அவர்களில் ஆஜர் எதிரிகள் யார் என்றும்

என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. காலால் மிதித்த நபர்கள் யார் என்றும் என்றால் அடையாளம் காட்ட இயலாது. போலீசார் விசாரணையின்போது இவ்வாறு தான் கூறினேனா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. சம்பவம் நடந்த நேரம் இரவு 8.45 மணி இருக்கும். இருட்டு நேரம் தான். போலீசார் விசாரணையின்போது 08.07.2022 அன்று இரவு 8.45 என்று குறிப்பிட்டு சொன்னேன். காவல் நிலையத்தில் சென்று நானும், தங்கதுரையும் புகார் கொடுத்தோம். தாக்குதல் நடந்த இடத்திற்கு உடனடியாக போலீசார் வரவில்லை. பின்னர் சம்பவ இடத்திற்கு போலீசார் எப்பொழுது வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை சம்பவ தினமான 08.07.2022 அன்றே விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் சம்பவத்தின்போது யாரும் கோபாலகிருஷ்ணனின் உடம்பில் இருந்த நகையையோ, பணத்தையோ யாரும் திருடி செல்லவில்லை என்று நான் கூறவில்லை. போலீசார் விசாரணையில் எனது வலது கையில் இருந்த கைசெயின் மற்றும் எனது சட்டை பையில் இருந்த ரூபாயை திருடி எடுத்து சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. போலீசார் விசாரணையில் எனது சட்டைபையில் இருந்த ரூபாயை எடுத்தாக குறிப்பிட்டேன் என்று சாட்சி கூறுகிறார். இருட்டு நேரமாக இருந்ததால் , யார் எந்த ஆயுதத்தால் கோபால கிருஷ்ணனை தாக்கினார்கள் என்று என்னால் சரியாக சொல்லமுடியாது என்றால், கம்பியால் கூட்டத்தில் யாரோ அடித்தார்கள். காலால் மிதித்தார்கள் கூட்டத்தில் யார் என்று பார்க்கமுடியவில்லை. கோபாலகிருஷ்ணனுக்கு ஏற்பட்ட காயங்கள் யாரால், எவ்வாறு ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால், சரிதான். கோபாலகிருஷ்ணனுக்கு கழுத்தில் மற்றும் குறுக்கில் அடிபட்டது, காயங்களை பற்றி வேறு விபரங்கள் சொல்ல தெரியவில்லை. அன்று சம்பவத்தில், தாக்கிய நபர்களை தவிர, அருகில் இருந்த ஊர்காரர்களும் கூடியிருப்பார்கள் என்றால், இருட்டு என்பதால் சரியாக தெரியவில்லை. இருட்டாக இருந்ததால் யார் எங்கிருந்து வந்தார்கள் என்று

என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால், பைக்கில் வந்தார்கள். ஆஜர் 1ம் எதிரியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையில் அவரின் பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. கூட்டத்தில் இருந்த நபர்கள் வெட்டுகத்தி வைத்திருந்தது மணிகண்டன் என்று சொன்னார்கள். அந்த சம்பவத்திற்கு முன்பும், சம்பவ சமயத்திலும் மணிகண்டனை எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் சொல்லும் மணிகண்டன் யார் என்பதை நான் அடையாளம் காட்ட போலீசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால், சரிதான். ஆஜர் எதிரிகளில் மணிகண்டனை நான் அன்று பார்த்ததை வைத்து அடையாளம் சொல்கிறேன். போலீசார் விசாரணையில் எதிரிகள் மாறி மாறி தாக்கினார்கள் என்று நான் குறிப்பிட்டேனா என்ற விபரம் எனக்கு நினைவில்லை இல்லை. தேர்தல் நடந்த தேதி 09.07.2022. தேர்தல் நேரம் என்பதால் போலீசார் ரோந்து பணியில் இருப்பார்கள் என்றால், அந்த சமயத்தில் இல்லை. தேர்தலுக்கு முந்தின தினம் வெளியூர்காரர்கள் தேர்தல் நடைபெறும் இடத்திற்கு வரகூடாது என்றால், சரிதான். சம்பவ தினதன்று பார்த்த வெட்டுகத்தியில் கொக்கி இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. நான் குறிப்பிடுவதுபோல ஆஜர் எதிரிகளுக்கும், நடந்த சம்பவத்திற்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்றாலும், நான் அரசியல் நோக்கங்களுக்காக, எதிரிகளுக்கு எதிராக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. போலீசார் விசாரணையில் நான் திராவிட முன்னேற்ற கழகத்தின் கிள்ளியூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணியின் பொறுப்பாளராக இருந்து வருகிறேன் என்று நான் குறிப்பிடவில்லை. நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், கோபால கிருஷ்ணனுக்கு ஆதரவாக தவறுதலாக சம்பவ இடத்தில் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**